ஆரம்பப் பள்ளிகளுக்கு முழுநேரத் தொழிலாசிரியர்கள்.

* 88 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியம், தனியார் சார்பில் அமைந்திருக்கும் தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளிகளில் முழு நேரத் தொழிலாசிரியர்களை அமர்த்த அரசு முன்வருமா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 6 முதல் 8-வது வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தது 5 பிரிவுகளாவது உள்ள பள்ளிகளில், தொழிலாசிரியர்களுக்கு வாரம் ஒன்றுக்கு தொழில் புகுமுகப் பயிற்சியில் 18 பாட நேரங்களுக்குக் குறைவில்லாமல் வகுப்புகள் அமையுமானால், அத்தகைய பள்ளிகளில், முழு நேரத் தொழிலாசிரியர்களை அமர்த்த 1963-64 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த பார்ட் டைம் க்ராப்ட் இன்ஸ்ட்ரக்டர்களுக்கு தற்சமயம் 30 ரூபாய்தான் ஊதியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் குறைவாக இருப்பதால் இந்த 30 ரூபாயை அடிப்படைச் சம்பளமாக வைத்துக்கொண்டு டி. ஏ. போன்ற அலவன்சுகளைக் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. இவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்குவதற்கு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. பக்கத்தில் உள்ள இரண்டு மூன்று பள்ளிகளை ஒன்றாக எடுத்துக் கொண்டு இவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கி, முழு நேர ஆசிரியர்களுக்கான ஊதியத்தைக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை ஓரளவு தீரும்.

திரு. வி. டி. அண்ணாமலை : தற்போது க்ராஃப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ் தச்சுத் தொழில், கைத்தறித் தொழில் இவைகள் மட்டும் கற்றுக் கொடுக்கிறார்கள். இத்துடன் வானொலிப் பெட்டிகள் தயாரித்தல், கடிகாரம் தயாரித்தல், மின்சார இணைப்புகளைக் கற்றுக் கொடுத்தல் ஆகியவற்றையும் கற்றுக் கொடுத்து, தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் தரத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது கைத்தறித் தொழில், தச்சுத் தொழில் இவைதான் ஆங்காங்கு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றவைகள் எல்லாம் வேறு டெக்னிக்கல் ஸ்கூல். டெக்னிக்கல் ட்ரெயினிங் என்ற அளவில் அப்பாடப் பிரிவுகள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்படுவதால், கைத்தொழில் பிரிவின்கீழ் அவை வராததன் காரணமாக இங்கு கைத்தறித் தொழில் தச்சுத் தொழில் இவை மட்டும்தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

1970 ஆகஸ்ட் 28]

திரு. வ. ஜார்ஜ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசாங்கப் பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் க்ராப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ் பார்ட் டைமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாரத்திற்கு இருபது பீரியடுகளுக்கு மேல் இருக்கின்றன. அப்படி இருந்தபோதிலும் முழு நேர வேலையாக அவற்றை ஆக்குவதற்கு வருடந்தோறும் கன்வர்ஷனுக்கு எழுதுவதும், அவை பாக்கட் வீட்டோ என்ற முறையில் அவை எந்தவிதமான உத்தரவும் இடாமல் இருக்கின்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்களை முழு நேர ஆசிரியர்களாக கருதப்படும் என்ற உறுதியின் பேரில் அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 18 வகுப்புகள் எடுக்கிற சூழ்நிலை இருந்தால் அவர்கள் முழு நேர ஊழியர்களாக கருதப்படுகிறார்கள். எல்லா வகைகளிலும் தகுதி பெற்று படிப்புத் தகுதி, தொழில் தகுதி இவை இரண்டும் பெற்றிருப்பார்களேயானால் அவர்களுக்கு முழு நேரச் சம்பளமும் தரப்படுகிறது. தொழில் தகுதி பெற்று படிப்புத் தகுதி பெறாமல் இருந்தால் ரூ. 55—1—70 என்ற அளவில் தரப்படுகிறது. தொழில் தகுதி பெறாமல் ப்ரீவொக்கேஷனல் அளவு பயிற்சிபெற்ற கல்வித் தகுதி மட்டும் பெற்றிருந்தால் 55 என்று இருக்கிறது. எல்லாத் தகுதிகளும் பெற்று 18 வகுப்புகளுக்கு மேல் இருந்தால் அவர்கள் முழு நேர ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். 18 வகுப்புகளுக்கு மேல் வேலை செய்து முழுத் தகுதியும் பெற்றும், அவர்களுக்கு முழு நேரச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்தால் அது என் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அந்த ஆசிரியர்களின் குறைபாடுகளை நீக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

* 89 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Municipal Health Officer at Tiruchirappalli has found out chemical adulterated in the rose coloured sago "Vadam" used in marriages; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருளை விற்றதற்காக திருச்சிராப்பள்ளியில் சின்னக் கடைத் தெருவைச் சேர்ந்த திரு. வெங்கட்ட சுப்பிரமணியம் என்பவரின் மகன் திரு. சிவகுமார் என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, அவருக்கு திருச்சி குற்ற விசாரணை இணை நீதிபதி அவர்களால் 18—10—1969-ஆம் நாளன்று ரூ. 50 தண்டம் விதிக்கப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: மக்களுடைய உடல்நலனையும் சுகாதாரத்தையும் கருதி இம்மாதிரி கலப்படம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா?